Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877

32ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 32 பாலம்: 04 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் FEBRUARY 15, 2022

# சுதந்திரத்திற்கான பாரவூர்திகளின் அணிவகுப்பு

‘சுதந்திரத்திற்கான பாரவூர்திகளின் அணிவகுப்பு’ என்ற பெயரில் கனடாவில் பல நகரங்களிலும் இருந்து ஆரம்பமான பாரவூர்திகளின் அணிவகுப்பு, கனடாவின் தலைநகரமான ஒட்டாவாவை 2022 ஜனவரி 29ஆம் திகதி வந்தடைந்தது. அன்றில் இருந்து இவ்வாகன அணியும் அதன் ஆதரவாளர்களும் ஒட்டாவாவில் கனடிய நாடாளுமன்றத்திற்கு முன்னர் உள்ள பல வீதிகளில் வாகனத்தை நிறுத்தி வைத்துக் கொண்டு போக்குவரத்தை முடக்கியுள்ளனர்.

சாதாரண வேலைநாள் ஒன்றில் சுமார் 30,000 பாரவூர்திகள் அமெரிக்க-கனடிய எல்லையைத் தாண்டுகின்றன. இவற்றின் மூலம் ஒரு பில்லியனுக்கு மேற்பட்ட வர்த்தகப் பரிவர்த்தனை ஒருநாளில் அமெரிக்காவிற்கும், கனடாவிற்கும் இடையில் நடைபெறுகின்றது.

கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவல் தொடங்கிய காலத்தில் இருந்து அமெரிக்க-கனடியப் போக்குவரத்துகள் தடைசெய்யப்பட்ட காலத்திலும்கூட அமெரிக்க-கனடிய பாரவூர்திகளின் போக்குவரத்து நிறுத்தப்படவில்லை. இப்பாரவூர்திகள் எப்போதும் எவ்வித தடங்கலும் இல்லாமல் இரண்டு நாடுகளுக்கும் இடையே வர்த்தகப் பரிவர்த்தனையை செய்துகொண்டு இருந்தன.

கனடிய மத்திய அரசு இவ்வாறான சுதந்திரப் போக்குவரத்திற்கு 2022 ஜனவரி 15இல் கட்டுப்பாட்டை விதித்தது. ஜனவரி 15ஆம் திகதிக்குப் பின்னர் கனடாவிற்குத் தரைப்பாதையால் வரும் எந்தப் பாரவூர்தி ஓட்டுநரும், கட்டாயமாகக் கோவிட்-19 தொற்றுநோய்த் தடுப்பூசிகள் இரண்டு போட்டிருக்க வேண்டும். அவ்வாறு இரண்டு தடுப்பூசிகள் ஓட்டுநர் போட்டிருக்காவிட்டால் அவர் மற்றைய தரைப்பாதையால் வரும் பிரயாணிகள் போல் தனிமைப்படுத்தப்படும் விதிகளுக்கு உட்படுத்தப்படுவார்.

அமெரிக்க அரசும் கனடாவைப் போல் கனடாவில் இருந்து அமெரிக்கா வரும் பாரவூர்தி ஓட்டுநர் எவருக்கும் எவ்வித கட்டுப்பாட்டையும் கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவல் தொடங்கிய காலத்தில் இருந்து விதிக்காமல் இருந்தது. பின்னர், அமெரிக்க அரசும் இவ்வாறான சுதந்திரப் போக்குவரத்திற்கு 2022 ஜனவரி 22ஆம் திகதியில் இருந்து கட்டுப்பாட்டை விதித்தது. தற்போது, ஜனவரி 22ஆம் திகதிக்குப் பின்னர் அமெரிக்காவிற்குத் தரைப்பாதையால் செல்லும் எந்தப் பாரவூர்தி ஓட்டுநரும் கட்டாயமாகக் கோவிட்-19 தொற்றுநோய்த் தடுப்பூசிகள் இரண்டு போட்டிருக்க வேண்டும்.




பாரவூர்தி ஓட்டுநருக்கான கட்டுப்பாட்டைக் கனடா ஜனவரி 15ஆம் திகதி முதல் அமலபடுத்தினாலும், கனடிய மத்தியரசு ஜனவரி 15ஆம் திகதி முதல் இக் கட்டுப்பாடு அமுலுக்கு வருமென 2021 நொவம்பர் 19ஆம் திகதியே அறிவித்திருந்தது.

பெரும்பாலான பாரவூர்தி உரிமையாளர்களையும், ஓட்டுநர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட கனடிய பாரவூர்திக் கூட்டணியினுடைய (Canadian Trucking Alliance) தகவலின்படி கனடாவில் 120,000 பாரவூர்தி ஓட்டுநர் உள்ளனர். அவர்களில் 85%ஆனோர் ஏற்கனவே கோவிட்-19 தொற்றுநோய்த் தடுப்பூசிகள் இரண்டு போட்டுள்ளனர். அத்துடன் கனடாவிற்கும், அமெரிக்காவிற்கும் தினமும் தரைப்பாதையால் போக்குவரத்துச் செய்யும் அமெரிக்க மற்றும் கனடிய பாரவூர்திகளின் 160,000 ஓட்டுநரில் 134,000 பேர் ஏற்கனவே கோவிட்-19 தொற்றுநோய்த் தடுப்பூசிகள் இரண்டும் போட்டவர்கள். இதனால் இந்த அமெரிக்க மற்றும் கனடிய புதிய கட்டுப்பாட்டு விதிகள் இரண்டு நாடுகளிலும் ஏறக்குறைய 26,000 பாரவூர்தி ஓட்டுநர்களை மட்டுமே பாதிக்கும் என அத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரவூர்தி ஓட்டுநர்களுக்கு ஜனவரி 15ஆம் திகதியில் இருந்து கனடாவில் அமல்படுத்தப்படும் இக்கட்டுப்பாட்டை எதிர்க்க வென்றே சுதந்திரத்திற்கான பாரவூர்தி அணிவகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இவர்களது பாரவூர்தி அணிப்போராட்டம் இவ்வாறு ஆரம்பித்தாலும் இது நாளடைவில் விரிவு பெற்று கனடா முழுவதும் கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவலைத் தடுக்க அமல்படுத்தப்பட்ட எல்லாவிதமான கட்டுப்பாடுகளையும் மத்திய மற்றும் மாகாண அரசுகள் நீக்கும்வரை தொடரும் எனத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, இப்போராட்டக்காரர்கள் நாட்டில் அமல்படுத்தப்படும் முகக்கவசம் அணிதல், மக்கள் ஒன்று கூடுதலில் உள்ள கட்டுப்பாடுகள், அத்தியாவசியமற்ற இடங்களுக்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்...)

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com

Lexus of Richmond Hill
LEXUS
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
Kumar Jegasothy
Sales Consultant
11552 Yonge Street
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com

My services are 100% FREE
Para Tisi

FOR ALL YOUR COTTAGE NEEDS
SIVAGE SIVAGUMARAN
416-553-8902
sivagehomes@sivage.ca
www.sivage.ca
RE/MAX

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
TRUTH BUILDS TRUST

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Sukumar Selvaratnam
Real Estate Broker
416.624.4803
suku07@hotmail.com
www.sukumarhomes.com

DENTAL OFFICE
3351 Markham Road, Unit #129
Markham & Steeles
Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit #5
Markham & Eglinton
Tel: 416.264.3232
Dr.Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS(Glasg.)
Dental Surgeon
Dentistry for children, adults and seniors

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Broker
Dir: 647.839.0079
Re/Max Realtron Realty Inc





# சுதந்திரத்திற்கான...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

குச் செல்லும்போது தடுப்பூசி போட்டதை உறுதிப்படுத்துதல் போன்ற எல்லாவிதமான கட்டுப்பாடுகளையும் மத்திய மற்றும் மாகாண அரசுகள் நீக்கும்வரை தமது போராட்டங்கள் தொடரும் என அறிவித்துள்ளனர்.

சுதந்திரத்திற்கான பாரவூர்தி அணி வகுப்பிற்கான செய்தித் தொடர்பாளரான Ben Dichter ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், "நாங்கள் தடுப்பூசி ஆணைகள் (Mandates) மற்றும் தடுப்பூசிக் கடவுச் சீட்டுக்கள் (Passports) எல்லாவற்றையும் அகற்ற வேண்டும் என வலியுறுத்துகிறோம்" என்றார்.

சுதந்திரத்திற்கான பாரவூர்திகளின் அணி வகுப்பு கனடாவின் மேற்குக் கரையில் ஜனவரி 22இல் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் Prince Rupert நகரில் ஆரம்பமானது. பின்னர் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள Delta நகரில் ஜனவரி 23இல் இருந்து ஆரம்பமான இன்னொரு பாரவூர்தி அணி வகுப்புடன் சேர்ந்து இரண்டு அணி வகுப்பும் கனடியத் தலைநகரான ஒட்டாவாவை நோக்கிக் கனடாவை ஊடறுத்துச் செல்லும் மிகப்பெரிய பெருந் தெருவான Trans – Canada Highwayஇல் தொடர்ந்து சென்றன. இவர்கள் அல்பேட்டா மாகாணத்தினூடாக சஸ்கச்சுவான் மாகாணத்தை ஜனவரி 24இல் அடைந்தனர். சஸ்கச்சுவான் மாகாணத்தில் உள்ள Regina நகரை அடையும் போது அங்கு சேர்ந்த வாகன அணியுடன் அண்ணளவாக 1,200 வாகனங்கள் இந்த சுதந்திரத்திற்கான பாரவூர்தி அணி வகுப்பில் பயணித்தன. பல வாகனங்கள் இந்த வாகன அணிவகுப்பில் இடையிடையே சேர்ந்து சிறிது தூரம் சென்ற பின்னர் விலகிக் கொண்டன.



இவ்வாகன அணிவகுப்பு ஜனவரி 25இல் ஒன்ராறியோ மாகாணத்தில் Kenora நகரை அடைந்தது. அப்போது அந்த வாகன அணியில் 300 வாகனங்கள் பயணித்தன. இவர்கள் ஒன்ராறியோவின் வடபகுதியால் ஒட்டாவாவை நோக்கிப் பயணித்தனர். இவ்வேளையில், மனிற்ரோபா மாகாணத்தில் இருந்து ஜனவரி 26இல் ஆரம்பமான இன்னொரு சுதந்திரத்திற்கான பாரவூர்திகளின் அணிவகுப்பில் 400 வாகனங்கள் பங்குபற்றி ஒன்ராறியோவின் தென்பகுதியால் ஒட்டாவாவை நோக்கிப் பயணித்தன.

இதேநேரம் கனடாவின் கிழக்குப் பகுதியில் நோவா ஷ்கோஸியாவில் உள்ள Enfield நகரில் இருந்து ஜனவரி 27இல் சுமார் 15 பாரவூர்திகளின் அணி ஒட்டாவாவை நோக்கிப் புறப்பட்டன. இந்த அணி ஜனவரி 28இல் குவிபெக் மாகாணத்தில் இருந்து புறப்பட்ட 600 வாகனங்களுடன் சேர்ந்து ஒட்டாவாவிற்கு ஜனவரி 29இல் வந்தடைந்தன. இவ்வாறாக, பல இடங்களில் இருந்து வந்த பாரவூர்திகள் மற்றும் வான், கார் போன்ற வாகனங்களுடன் பாதசாரிகளும் சேர்ந்து ஏறக்குறைய 5,000 பேர் ஒட்டாவாவில் ஜனவரி 29இல் கூடினர் என ஒட்டாவா நகர நகர்காவலர் தெரிவித்தனர். CBC போன்ற ஊடகங்களின் கணிப்பில் இது 8,000 எனக் கூறப்பட்டது. இவர்கள் கனடிய நாடாளுமன்றக் கட்டிடத்திற்கு முன்னால் உள்ள வீதிகளை மறித்துத் தமது வாகனங்களை நிறுத்தியதுடன், தொடர்ந்து தமது பாரவூர்திகளின் ஒலியெழுப்பியை (Horn) இயக்கித் தொடர்ந்து சத்தம் எழுப்பியவாறு இருந்தனர்.

கனடியத் தலைநகர் ஒட்டாவாவின் பல வீதிகளை மறித்து வாகனங்களை நிறுத்திய சுதந்திரத்திற்கான பாரவூர்திகளின் அணிவகுப்பைச் சேர்ந்தோர் செய்த அத்துமீறிய செயல்களைத் தடுக்க முடியாமல் ஒட்டாவா நகர நகர்காவலர் தலைவர் மாகாண மற்றும் மத்திய அரசிடம் இருந்து உதவி கோரினார்.

இப்போராட்டக்காரர்கள் கனடியத் தேசியப் போர் நினைவிடத்தில் நிறுவப்பட்டிருந்த 'பெயர் தெரியாத இராணுவ வீரரின் கல்லறை' மீது மதுபோதையில் ஏறிக் குதித்தும், கனடியரின் மதிப்பிற்குரியவரான Terry Foxஇன் சிலையில் கனடியத் தேசியக் கொடியை தலைகீழாகக் கட்டியும் பல தரமற்ற செயல்களையும் செய்வதாகக் கனடியப் பாதுகாப்பு அமைச்சர் அனிதா ஆனந்த் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். இப்போராட்டக்காரர்களில் சிலர் Nazi கட்சியின் சுவஸ்திகா (Swastika) கொடியையும் வேறு சிலர் அமெரிக்கத் தீவிர வலதுசாரிக் கட்சியின் கொடியான Confederate கொடியையும் வைத்திருந்தனர் எனப் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மத் சிங் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

பாரவூர்திகளில் தொடர்ந்து இயக்கப்படும் Horn சத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒட்டாவா நகர மக்கள் ஒன்றுசேர்ந்து போராட்டக்காரர்களுக்கு எதிராகத் தொடர்ந்த வழக்கை விசாரித்த ஒன்ராறியோ மாகாண உயர்நீதிமன்ற நீதிபதி Hugh McLean ஒட்டாவா நகரில் பாரவூர்திகள் Horn சத்தம் செய்யக் கூடாது என 10 நாள் தடை உத்தரவை பெப்ரவரி 7ஆம் திகதி விதித்தார். அதைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் Horn சத்தம் செய்வதை நிறுத்தி விட்டனர்.

பெப்ரவரி 10ஆம் திகதியில் 400 பாரவூர்திகள் ஒட்டாவா நகர வீதிகளில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், அவற்றில் ஏறக்குறைய 100 பாரவூர்திகளில் ஒட்டுநரின் குடும்பம் சிறுவர்களுடன் இருப்பதாகவும் ஒட்டாவா நகர நகர்காவலர் தலைவர் Peter Soly தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நகர்காவலர் இதுவரையில் 400இற்கு

தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST
## FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# நாமும் நமது இல்லமும் 601

# அதிகரிக்கும் ரொறொன்ரோ சனத்தொகை




உலகளாவிய முக்கிய நகரங்களின் வரிசையில் ரொறொன்ரோ வந்துள்ளது. இதனால், உலகிலுள்ள பல நாடுகளில் இருந்து புதியவர்கள் தொடர்ந்து கனடாவை நோக்கி வந்து கொண்டு இருக்கின்றனர். கொரோனா-19இன் பாதிப்பால் 2020, 2021ஆம் ஆண்டுகளில் இந்தத் தொகை குறைந்துள்ளதனைக் காணக்கூடியதாக இருந்தது.

கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ருடோவின் அண்மைய கூற்றின்படி, வழக்கம் போலல்லாது அதிகமான புதியவர்களை உள்வாங்க இருப்பதாகத் தெரிகின்றது. ஏற்கனவே, வாடகைக்கு இடம் பெறுவதிலிருந்த நெகிழ்வுத்தன்மை சிறிது சிறிதாக இறுக்கமடைவதனைக் காணலாம். 2021ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கனடிய மக்கள் தொகை கணக்கெடுப்பு (Canadian Census) முடிவுகள் சில வெளியாகியுள்ளன. இதில் வந்துள்ள தரவுகளில் ஒன்று ரொறொன்ரோ மக்களை யோசிக்க வைத்துள்ளது. அதாவது, கடந்த 5 வருடங்களில் (2016 -2021) ரொறொன்ரோவிற்குப் புதிதாக வந்தவர் களைவிட அதிகமாக வீடு மற்றும் மனைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட ஆதனங்கள் 7%இனால் அதிகரித்து, இப்பொழுது 2,394,205 ஆதனங்கள் காணப்படுகின்றது. (அரசினால் நிர்வகிக் கப்படுகின்ற மனைகள் இதில் அடங்க வில்லை. இதே காலப்பகுதியில் ரொறொன்ரோவின் சனத்தொகை 4. 6%இனால் அதிகரித்து 6,202,225 ஆகக் காணப்படுகின்றது.

போதியளவு ஆதனங்கள் ரொறொன்ரோ வில் காணப்படாததால், ஆதன விலை மிக வேகமாக அதிகரிப்பதனைக் காணலாம். இதனால் கடந்த இரு வருடங்களில் (கோவிட்-19இன் காலத்தில்) ரொறொன்ரோவின் ஆதனவிலை 50% க்கும் மேலாக அதிகரித்துள்ளது. கனடா முழுவதும் ஆதனப்பற்றாக்குறை காணப் படுவது இயல்பாக உள்ளது. இதற்குரிய நிவாரணமாக அதிக ஆதனங்கள் நிர்மாணம் செய்வதே சிறந்த முடிவாகும்.

ஒன்ராறியோவில் ஏற்படும் அதீத விலை அதிகரிப்பு கனடியர்களை ஒன்றாரியோவை விட்டு மற்றைய மாகாணங்களிற்கு இடம் பெயர வைக்கின்றது. குறிப்பாக அல்பேட்டா மாகாணத்திற்குக் குடிபெயர்வ தனைக் காணலாம். இதனால் அல்பேட்டா வில் குறிப்பாக Calgaryஇல் ஆதன விலை அதிகரிப்பு ஏற்படுவதனையும் காணலாம்



இன்னுமொரு புதிய விடயத்தை இந்த மக்கள் கணக்கீடு வெளிப்படுத்தியுள்ளது.

| JANUARY 2022 - GTA HOUSING MARKET BY REGION | TORONTO | YORK | DURHAM | PEEL | HALTON |
|---|---|---|---|---|---|
| Average Sales Price: | *$1,073,143* | *$1,519,583* | *$1,175,010* | *$1,291,955* | *$1,484,265* |
| Total # New Listings | 3,109 | 1,464 | 874 | 1,583 | 685 |
| Total # Sales | 2,246 | 920 | 609 | 1,166 | 497 |
| Avg. Listing Days On Market (LDOM) | 18 | 13 | 7 | 9 | 10 |
| YTD Increase | *24%* | *30%* | *34%* | *36%* | *28%* |
| **HOUSE TYPES & AVERAGE SALE PRICE** | | | | | |
| Detached | $1,886,413 | $1,931,404 | $1,325,708 | $1,778,899 | $1,942,724 |
| Semi-Detached | $1,471,535 | $1,367,306 | $999,122 | $1,241,905 | $1,317,038 |
| Townhouse | $1,450,940 | $1,359,829 | $1,037,536 | $1,142,084 | $1,248,450 |
| Condo Apt | $760,473 | $761,593 | $604,964 | $686,827 | $792,661 |

Prepared By: Sivage Sivagumaran REALTOR® CPA, CGA, GUILD™, ABR, SRES, SRS, RSPS |Source: TRREB Data As of, Feb/03/2022




கனடாவில் 2016இலிருந்து 2021ஆம் ஆண்டுவரை அடுக்குமாடி மனைகள் மற்றும் வீடுகளின் நிர்மாணம் 5.7%இனால் அதிகரித்து 16,284,235 ஆதனங்கள் காணப்படுகின்றன. இதே காலப்பகுதியில் கனடிய சனத்தொகை 5.2%இனால் அதிகரித்து 2021இல் சனத்தொகை 36, 991,981 (37 மில்லியன்) ஆகக் காணப் படுகின்றது. இந்தக் காலப்பகுதிகளில் அதிக மக்கள் நகரப்பகுதியிலே குடியேறு வதனைக் காணக் கூடியதாக இருந்தது. ஆனால், கிழக்கு மாகாணங்களில் இந் நிலைமை மாறுதலாகக் காணப்பட்டாலும் மொன்றியல் நகரம் ரொறொன்ரோ போலவே செயல்படுவதனைப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. ரொறொன்ரோ அதாவது ஓர் ஆதனத்தில், தனி ஒருவர் வாழ்வதே அதிகமாகக் காணப்படுகின்றது. ஒரு வீட்டில் தாய், தகப்பன் மற்றும் ஒரு பிள்ளை வாழ்வதனைவிட தனியொருவர் வாழும் ஆதனத்தின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

இது கனடிய சரித்திரத்தில் முதல் தடவை ஏற்பட்டுள்ளது. (Living alone is most popular in Canada). இந்த நிலைமை எதிர்காலத்தைக் கட்டியம் கூறுவது போலக் காணப்படுகின்றது. எனவே சிறிதான, தனி அறை கொண்ட ஆதனங்கள் எதிர்காலத்தில் மிகவும் பிரசித்தியடையலாம் என்பதனை இது எடுத்துக்காட்டுகின்றது.

## பெய்ஜிங் நகரில் நடைபெறும் 24ஆவது குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியின் பதக்கங்களின் விபரம்



Medals

| RANK | COUNTRY | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | Norway | 9 | 5 | 7 | 21 |
| 2 | ROC | 4 | 6 | 8 | 18 |
| 3 | United States | 7 | 6 | 3 | 16 |
| 4 | Germany | 8 | 5 | 2 | 15 |
| 5 | Austria | 5 | 6 | 4 | 15 |
| 6 | Canada | 1 | 4 | 10 | 15 |
| 7 | Netherlands | 6 | 4 | 2 | 12 |

# MORTGAGE & LINE OF CREDIT

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC - No Income Required*)

⇒ **Private Mortgage** (No Income Verification)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



ஜெ(Jey)இராசதுரை
MBA. BBA (Hon) AMP

Team Leader / Mortgage
& Real Estate Broker

**Cell : 416-624- 4843**



www.mortgageclinicanada.com
**416-613-2788 / 416-816-9011**

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 1396 Don Mills Rd, Unit B121Toronto ON M3B 0A7 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# NOTARY PUBLIC & LEGAL SERVICES

**Notarizations, Certifications & Commissioning**

* Affidavits
* Certification of True Copy
* Preparation and Notarize the Letter of Invitation
* Commissioning Statutory Declarations and Solemn Affirmations
* Power Of Attorney & Will

* Small Claims
* Landlord & Tenant Matters
* Business Registration & Renewal

AAA Legal Services

AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Call:(416) 814 -7450**
(Markham Rd & HWY 401 - Scarborough)

** Promotional Rate for students
$20per sign

# இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகைச் சுதந்திரம்




2021 ஒகஸ்ற் 15 இதழ் தொடர்ச்சி...

• 30.09.2005 அன்று காலை 7:30 மணியளவில், 'மட்டக்களப்பு- ஈழநாதம்' செய்தித்தாளின் விநியோகஸ்தரான யோககுமார் கிருஷ்ணபிள்ளை (38 வயது) விசேட அதிரடிப்படையினரின், இரண்டு துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். இலங்கை இராணுவத்தின் உயர் பாதுகாப்புப் பகுதியான ஹட்டன் நாஷனல் வங்கியின் முன்னால் உள்ள மத்திய வீதியில், மட்டக்களப்பு நகரத்தின் மையத்தில் பலரும் பார்த்திருக்க இந்தப் படுகொலை நடந்துள்ளது. மட்டக்களப்பில் உள்ள ஒரே செய்தித்தாள் "மட்டக்களப்பு ஈழநாதம்", கொக்கட்டிச்சோலையில் இருந்து விடுதலைப்புலிகளினால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இலங்கை விசேட அதிரடிப்படையினரால், 10.09.2005இலிருந்து மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இதன் விற்பனை தடை செய்யப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

• சக்தி தொலைக்காட்சியின் செய்தியாளராகப் பணிபுரிந்து வந்த நாவாந்துறையைச் சேர்ந்த பி.தேவகுமாரன் 28.05.2008 அன்று துணைஇராணுவக் குழுவினரால் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

• ரூபாவாஹினியின் பெண் அறிவிப்பாளரான திருமதி.சக்ரியா கோம்ஸ் மற்றும் அறிவிப்பாளரான திரு. டேவிஸ் குருஜே. இருவரும் ஒரே நாளில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

* ஒன்லைன் செய்தி ஊடகத்தின் கார்ட்டூனிஸ்டும், கட்டுரையாளருமான எக்னெலிகொட, அவரது மனைவி மற்றும் இரண்டு இளவயது மகன்களுடன் ஜனாதிபதித் தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் மார்ச் 2010இல் தமது வீட்டைவிட்டு வேலைக்குச் சென்ற போது கடத்தப்பட்டுக் கொலைசெய்யப்பட்டார்.

• 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி அன்று இரவு 7:30 மணியளவில், 'நிலம்' என்ற மாத இதழின் ஆசிரியர் திரு. சுபாஷ் சந்திரபோஸ் (32வயது), வவுனியாவின் திருநாவற்குளத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். சந்திர



போஸ் ஊடகக் கல்லூரியில் கற்று டிப்ளோமா பட்டத்தைப் பெற்றுக்கொண்டதுடன் தேசிய நாளிதழான 'வீரகேசரி' நிறுவனத்தில் பத்திரிகை தொடர்பான பயிற்சியும் பெற்றார். இலண்டனில் இருந்து வெளிவரும் 'தமிழ் உலகம்' பத்திரிகை உட்பட ஏனைய தமிழ் வெளியீடுகளுக்கும் அவர் ஒரு செய்தியாளராகவும் பணியாற்றினார். அவரது வீட்டிற்குச் சென்ற ஆயுததாரிகள் அவரைப் படுகொலை செய்வதற்கு முன்னர் தமிழ் மற்றும் சிங்களத்தில் பேசிக்கொண்டிருந்ததை அவரது எட்டு வயதுக் குழந்தையும் உறுதிப்படுத்தியது. அவரது செய்தித்தாள் தகவல்களின்படி, 2007 ஏப்ரல் முதல் பதினெட்டு நாட்களில் வவுனியாவில் 25 பொதுமக்கள் கொல்லப்பட்ட விபரம் எழுதப்பட்டிருந்தமை மக்கள் மத்தியில் பரபரப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

• யாழ்ப்பாணத்தின் 'உதயன்' நிறுவனத்தில் சுமார் 6 மாதங்களாகப் பணிபுரிந்த இளம் ஊடகவியலாளரான செல்வராஜா ராஜீவர்மன், 29.04.2007 அன்று காலை 10 மணியளவில், யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் சந்தியில், நாவலர் வீதியினூடாக மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பொழுது, அரசாங்கத்துடன் இயங்கிக் கொண்டிருக்கும் துணை இராணுவக் குழுவினால் சுட்டுக்கொல்லப்பட்டார். உதயன் நிர்வாகிகளின் கூற்றுப்படி, ராஜீவர்மன் (25 வயது) யாழ்ப்பாணத்தில் நடந்துகொண்டிருந்த படுகொலைகள் மற்றும் பயங்கர குற்றச்செயல்கள் தொடர்பான புலனாய்வுப் பணியில் ஈடுபட்டிருந்தபோதே படுகொலை செய்யப்பட்டார்.

உதயன் மீதான தொடர்ச்சியான தாக்குதல்கள் தொடர்பாக ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் குழு கண்டனம் தெரிவித்ததுடன், ஒகஸ்ற் 24ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கு எழுதிய கடிதத்தில், இந்த தாக்குதல்கள் தொடர்பாக முழுமையான விசாரணைக்கு வலியுறுத்தியது.

• உதயன் பிரதம ஆசிரியர் கானமயில்நாதன் குறிப்பிடுவதுபோல் உதயன் மட்டுமல்லாது, தினக்குரல், ஈழநாடு, சுடரொளி, முரசொலி போன்ற பத்திரிகை நிறுவனங்களும், அவற்றின் செய்தியாளர்களும், பணியாளர்களும் காலத்திற்குக் காலம் இராணுவத்தினராலும், விமானப்படையினராலும், துணை இராணுவக் குழுவினராலும் தாக்கப்பட்டதில் பலர் கொல்லப்பட்டும் காயப்பட்டும் உள்ளனர். சிலர் அச்சத்தினால் தமது தொழில்களை உதறி எறிந்துவிட்டு நாட்டை விட்டே வெளியேறியுமுள்ளனர். குறிப்பாக இத் தாக்குதல்களின்பொழுது, உதயன் பத்திரிகையின் தீவகச் செய்தியாளர் மகாலிங்கம், சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஜோர்ஜ் சகாயதாஸ், இராசரத்தினம் இரஜித்குமார், சதாசிவம் பாஸ்கரன், உதயன் பத்திரிகையின் விநியோகஸ்தர் கிருஷ்ணபிள்ளை ஜோய்குமார், உதயன் அலுவலகத்தில் இருந்த காவலாளி, உதயனின் செய்தியாளர் ரஞ்சிதகுமார் 02.05.2006ஆம் திகதி அன்று துணை இராணுவக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதேபோன்று தினக்குரல் பத்திரிகையின் விற்பனைப் பிரதிநிதி கிருஷ்ணபிள்ளை நவரத்தினம், தினக்குரல் மற்றும் மெற்றோ நியூஸ் பத்திரிகையின் விநியோகஸ்தரான 22 வயதான மரியதாஸ் மனோராஜ் 'ஈழமுரசு' பத்திரிகையின் சுன்னாகம் விற்பனைப் பிரதிநிதி நவரத்தினம் ஆகியோரும் படுகொலை செய்யப்பட்டனர்.

• 24.01.2006 அன்று காலை 6 மணியளவில், நாளிதழான 'சுடர் ஒளி' பத்திரிகையின் நிருபர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் (35 வயது), திருக்கோணமலையில் உள்ள அவரது வீட்டிற்கு அருகில் பஸ்வண்டிக்காகக் காத்திருந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்று விட்டனர். திருகோணமலை ஐந்து மாணவர்களின் படுகொலைகளில் இலங்கை இராணுவம் ஈடுபட்டதைக் காட்டும் வகையில் கொல்லப்பட்ட மாணவர்களின் புகைப்படங்களுடன் அவற்றை அம்பலப்படுத்துவதில் சுகிர்தராஜன் முக்கிய பங்கு வகித்ததாகத் திருகோண மலையில் வாழ்வோர் தெரிவித்தனர்.

• இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தியாளரான வஸ்தியான் அந்தோனி மரியதாஸ் 31.12.1999 அன்று வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

• மே 2, 2006 அன்று இரவு 7:45 மணியளவில், துணை இராணுவக் குழுவின் ஐந்து துப்பாக்கிதாரிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் நாளிதழான உதயனின் பிரதான அலுவலகத்திற்குள் நுழைந்து, வரவேற்பறையில் இருந்த ஊழியர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதனை அடுத்து விற்பனை முகாமையாளரான, சுரேஷ் என அழைக்கப்படும் பாஸ்டியன் ஜோர்ஜ் சாகாயதாஸ் (37வயது) ராஜரத்தினம் ரஞ்சித் (25) ஆகியோரும் கொல்லப்பட்டனர். அலுவலகத்தில் இருந்த மற்ற இரண்டு ஊழியர்களான எஸ். உதயகுமார் மற்றும் என்.தயாகரன் ஆகியோர் காயங்களுடன் யாழ்ப்பாண மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

நேரில் கண்ட சாட்சிகளின் கூற்றுப்படி, ஐந்து துப்பாக்கிதாரிகள் T-56 துப்பாக்கிகள் மற்றும் கைத்துப்பாக்கியைப் பயன்படுத்தி நாற்பது தடவைகளுக்கு மேல் துப்பாக்கிச் சூடுகளை மேற் கொண்டனர். இப்பகுதியில் உள்ள நேரில் பார்த்தவர்கள் இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாகத் தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவரான கறுப்பு உடை அணிந்த, துணை இராணுவக் குழுவான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினரை அடையாளம் காட்டினர்.

• 21.08.2006 அன்று இரவு 7:20 மணியளவில், சின்னதம்பி சிவமகாராஜா யாழ்ப்பாணத்திலிருந்து 14 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள தெல்லிப்பளையில் உள்ள அவரது தற்காலிக இல்லத்தில் இருந்தபொழுது இராணுவ புலனாய்வாளர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார். சின்னத்தம்பி சிவமகாராஜா (68 வயது), நமது ஈழநாடு பத்திரிகையின் நிர்வாக இயக்குநராகவும், தெல்லிப்பளை பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவராகவும், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதான பங்காளிக்கட்சியான இலங்கை தமிழ்அரசுக் கட்சியின் மூத்த உறுப்பினராகவும் இருந்து மக்களுக்கான சேவைகளை வழங்கிவந்த நிலையிலேயே இவர் படுகொலை செய்யப்பட்டார்.

• 'சத்தான' பத்திரிகையின் ஆசிரியராகவும், மற்றொரு சிங்கள செய்தி ஊடகத்தின் செய்தியாளராகவும் பணி புரியும் ரோஹன்குமாராவும், 'சத்தின' என்ற சிங்களப் பத்திரிகையின் செய்தியாளரான தெகிவலையைச் சேர்ந்த சம்பத் லக்மல் டி சில்வா ஆகியோரும் சிங்கள சமூகத்தை சேர்ந்தவர்களாக இருந்த போதும் 02.07.2006ஆம் திகதி இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

• வடக்குக் கிழக்கு மக்களுக்கு நன்கு தெரிந்த பத்திரிகையாளரும், பத்தி எழுத்தாளரும் சுயாதீன ஊடகவியலாளருமான மட்டக்களப்பைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி இலங்கை இராணுவத்தின் குண்டுவீச்சுக்கள் மற்றும் விமானத்தாக்குதல்களால், வன்னியில் ஏற்பட்டுவரும் பாதிப்புக்கள் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்த போது 12.02.2009இல் விமானப் படையினரின் குண்டு வீச்சில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

• தனியார் நிறுவனமான மகாராஜா நிறுவனத்திற்குச் சொந்தமான எம்.வி.சி /

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

விளம்பரம்
VLAMBARAM
32ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# நாசா விண்வெளி ஆய்வு மையத்தின் முன்னாள் ஈழத்தமிழ் விஞ்ஞானி கலாநிதி. வைத்திலிங்கம் துரைசாமி




சந்திரனில் மனிதன் தடம் பதித்த நாள் 1969ஆம் ஆண்டு யூலை 9ஆம் திகதி.

'மனிதனுக்கு ஒரு சிறு கால் தடம், மனித வர்க்கத்திற்கு பேராற்றல் வாய்ந்த ஒரு படி" (A SMALL STEP FOR MAN, BUT A GIANT STEP FOR MAN KIND) என்ற ஆங்கில வாசகத்துடன் உலகமே வியந்து நின்ற நாள். விஞ்ஞான உலகமும் விண்வெளி ஆய்வுகளும் தொடரும் சாதனைகளும் இன்று பல பரிணாமங்களைக் கடந்து வந்துவிட்டது. அக்காலங்களை சற்று நேரம் என் மனக்கண் முன் நினைத்துப் பார்க்கின்றேன்.

சந்திரனுக்கு மூன்று பேரை அந்தக்காலம் அனுப்பி வைத்த அமெரிக்க நாசா விண்வெளி ஆய்வு மையத்தில் கூட்டாகப் பணிபுரிந்த விஞ்ஞானிகளில் ஈழத்தமிழன் ஒருவர். அவர் இன்று அமெரிக்காவில் தனது 90ஆவது பிறந்த தினத்தினை கொண்டாடும் கலாநிதி வைத்திலிங்கம் துரைசாமி. அவர் ஈழ மண்ணில் குப்பிழான் என்னும் கிராமத்தில் பெப்ரவரி 08, 1932இல் பிறந்தார்.

குப்பிழானில் இன்று சிவபூமியினால் நடத்தப்படும் சிவஞான ஆச்சிரமமாக உள்ள இல்லமே அவர் பிறந்து வளர்ந்த அவரது பெற்றோரால் உருவாக்கப்பட்ட மனையாகும். தான் பிறந்த கிராமத்தின் மீது கொண்ட அபிமானத்தினால் அமெரிக்காவில் பிறந்து, இன்று அங்கு வாழும் தனது கடைசி பிள்ளையின் நடுப்பெயரினை 'குப்பிழான்' என வைத்து அதுவே இன்றும் பேணப்படுகின்றது. அதாவது அவரது பெயர் கணேஷ் குப்பிழான் துரைசாமி என்பதாகும்.

கலாநிதி. வைத்திலிங்கம் துரைசாமி அவர்களின் தந்தை தனது இளமைக் காலத்தில் தாயக மண்ணிலிருந்து கடல் கடந்து சென்று 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் மலேசியாவில் புகையிரதப் பிரிவில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். இவருடன் கூட பிறந்தோர் இரு அக்கா, ஒரு தங்கை.

இவர் குப்பிழான் விக்கினேஸ்வரா வித்தியாசாலை (இன்று விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்), புன்னாலைகட்டுவன் ஆங்கிலப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியினைத் தொடங்கி தொடர்ந்து சுன்னாகம், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரியில் உயர் கற்கை நெறியினை முடித்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் கணிதத் துறையில் சிறப்பு பட்டம் (B.Sc. (Hons.) in Maths) பெற்றார்.

மாணவப் பருவத்தில் குப்பிழான் கிராமத்தில் தனது தந்தையின் விவசாய விளைநிலங்களில் இரவு பகலாக வேலை செய்வதும், சுன்னாகம், ஸ்கந்தவரோதயா கல்லூரிக்குத் தினமும் கால்நடையாகவும், ஓட்டமுமாகச் சென்று படித்து வந்ததும் இவர் வாழ்வின் சுவையான காலங்கள் ஆகும். அந்த ஓட்டம் அவரை அக்காலங்களில் விளையாட்டுப் போட்டிகளில் பல இடங்களில் வீரனாக்கியது.
இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கணித, விஞ்ஞானத் துறையில் பட்டப்படிப்பினை முடித்து, அங்கு பகுதிநேர விரிவுரையாளராகப் பணிபுரிந்து வந்தார். அந்நேரம் அவர் கல்வி கற்ற யாழ். மத்திய கல்லூரி நிர்வாகம் இவரது பல்கலைக்கழகப் பேராசிரியர் ஊடாகத் தங்கள் கல்லூரியில் விசேட நியமனம் வழங்க அழைப்பு விடுத்திருந்தது.

தொடர்ந்து தனது வாலிப வயதில் யாழ். மத்திய கல்லூரியில் உயர்தர வகுப்புகளுக்கு கணிதம், பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியராகவும், மாணவர் விடுதிப் பொறுப்பாளராகவும் சில காலங்கள் பணிபுரிந்து வந்தார். அப்போது தனது கல்வித்துறை சார்ந்த தகைமைகளை மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இங்கிலாந்து சென்று 'பட்டவியல் கணக்காளர்' (Chartered Accountant) கல்விதுறையில் பயில்வதற்கு அனுமதி பெற்று அங்கு செல்வதற்கு கப்பல் பிரயாண ஒழுங்குகளை மேற்கொண்டார்.

இவரது யாழ். மத்திய கல்லூரியின் வெற்றிடமான ஆசிரியர் நியமனத்திற்குக் குப்பிழானைச் சேர்ந்த அவரது உறவினரும் நண்பருமான திரு. சின்னதம்பி நடராஜா அவர்களுக்கு வழங்கப்பட்டது. யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவரான திரு. சின்னதம்பி நடராஜா அவர்கள் சென்னை கிறிஸ்துவ கல்லூரியில் பௌதிகவியல் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர்.

1958ஆம் ஆண்டு: கடல் கடந்து அந்நிய நாடு ஒன்றுக்குச் செல்பவரை ஒரு ஹிரோவாகப் பார்க்கும் காலம். விமானப் பிரயாணம் என்பது மிகச் செலவானதாகவும், அருமையானதாகவும் இருந்தமையால், கடல் மார்க்கமாகவே பலரும் பிரயாணம் செய்வர். இவரது பிரயாணமும் கொழும்பு துறைமுகத்தில் இருந்து, அக்காலத்திற்குரிய 100 இங்கிலாந்து பவுண்ஸ் கப்பல் கட்டணத்துடன் ஆரம்பித்தது. மூன்று கிழமையின் பின்பு, ஐந்து நாடுகளின் துறைமுகங்களில் (Bombay, Port of City of



Aden in Arab Country, Suez in Egypt, Beirut Labanon, Marsailees in France) அவர் சென்ற பிரயாணக் கப்பல் தரித்து நின்று இறுதியில் இங்கிலாந்து நாட்டின் 'சவுதம்ரன்' (Southamton) துறைமுகத்தினை அடைந்தது.

இலண்டனில் 'கணக்காய்வு அலுவலகம்' ஒன்றில் கிழமைக்கு ஐந்து பவுண் ஊதியத்தில் அவருக்கு வேலை கிடைத்தது. அதே துறையில் பணி புரிந்துகொண்டு பட்டயக் கணக்காளர் கல்வியினைத் தொடர்வதே அவரது நோக்கமாக இருந்தது. 'கணக்காளர்' தொழில் என்பது கௌரவமான தொழிலாக இருந்தாலும் தனது எதிர்கால வாழ்வில், தனது ஆற்றல், திறமைகளை வெளிக்கொணர இது உகந்ததல்ல என்ற எண்ணங்கள் முதல் ஐந்து மாதத்தினுள் அவரது மனதில் எழுந்து பல குழப்பங்களை உருவாக்கியிருந்தது.

இலண்டன் நகரின் நூலகம் ஒன்றுக்கு சென்றபோது, அக்காலம் (1958ஆம் ஆண்டு) பிரித்தானிய காலனித்துவ நாடுகளில் ஒன்றான 'ஜேமன்' (Aden என்ற பெயரில முன்பிருந்தது) நாட்டில் ஆசிரியத் தொழிலுக்கு விண்ணப்பங்கள் கோரும் தகவல் கிடைத்து மனு செய்தார்.

உடனடியாக அவரது பாதை மாறியது. அவரது விண்ணப்பம் ஏற்கப்பட்டு இலண்டனில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு பிரித்தானியாவின் காலனித்துவ ஆதிக்கத்திலிருந்த அராபிய நாட்டில் ஆசிரிய நியமனமும் கிடைத்தது. இலண்டனில் தொடரவிருந்த பட்டயக் கணக்காளர் கனவினை நிறுத்திவிட்டு அராபிய நாடான ஜேமன் சென்று அங்கு ஆசிரிய தொழில் செய்தார்.

1960ஆம் ஆண்டு: தாயக மண் திரும்பி வந்து இல்லற வாழ்வில் இணைந்து கொண்டார். யோகராணி இவரது இல்லத்தரசியானார். அவர் யாழ்ப்பாணத்தில் ஊரெழு என்ற கிராமத்தினைப் பூர்வீகமாகக் கொண்டவர். சென்னைப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரி. இவர்களின் இல்லற வாழ்வில் மூன்று பிள்ளைகள். மூத்த மகன் பிரகாஷ், பல் மருத்துவர். மகள் கல்பனா, மருத்துவர். இளைய மகன் கணேஷ் தகவல் தொழில்நுட்பவியலாளர். தற்போது மூவரும் அமெரிக்காவில் பணிபுரிகின்றனர். திருமணத்தின் பின்பு மீண்டும் ஜேமன் நாடு சென்று தனது ஆசிரியப் பணியினைத் தொடர்ந்தார்.

1961ஆம் ஆண்டு: அமெரிக்காவில் பணிபுரிந்து கொண்டிருந்த இவரது பல்கலைக்கழக நண்பன், பௌதிகவியல் நிபுணர் கலாநிதி. அருணாசலம் அவர்களின் ஆலோசனையை ஏற்று அமெரிக்கா சென்று 'Massachusetts' பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டம் பெற்றார். தொடர்ந்து அமெரிக்காவின் 'மேரிலான்ட் பல்கலைக்கழகத்தில்' பிரயோக கணிதத்தில் கலாநிதி பட்டம் பெற்றார். 'இதனைத் தொடர்ந்து சர்வதேச ரீதியில் தொழில்நுட்பத் தகவல்களை வழங்கும் அமெரிக்காவின் பிரபல்யமான தொலைபேசி மற்றும் தொலைக்காட்சிக் கம்பனியின் நுண்பரிசோதனைக் கூடத்தில் (Bell Comm Laboratory) தொழில்நுட்பவியல் விஞ்ஞானியாகத் தனது பணியினைத் தொடர்ந்தார்.

விண்வெளி ஆய்வுகளை மேற்கொள்ளும் சர்வதேச விண்வெளிப் பல்கலைகழகமான அமெரிக்க நாசா பல்கலைக்கழக விண்வெளி ஆய்வுகளுக்குத் தொலைத் தொடர் தொழில்நுட்பங்களை வழங்கும் ஒரு நிறுவனமாக இவர் பணிபுரிந்த 'பெல் நுண்பரிசோதனை மையம்' இபுரிந்தது. இக்காலங்களில் கூட்டாக இயங்கிய நாசா விண்வெளி விஞ்ஞானிகளுடன் பணி புரிந்து, தனது திறமைகளை விண்வெளி ஆராய்ச்சித் துறைகளுக்கு வழங்கிப் பல வெற்றிகரமான விஞ்ஞான ஆய்வுகளுக்கு உதவியது அவர் வாழ்வில் ஒரு சாதனைமிகுந்த காலமாகும்.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 6, Scarborough, ON M1H 1A7



# இன்னல் நீக்கும் இயற்கை - 83



- அகணி -
authorakani@gmail.com

இன்றைய கட்டுரையில் கீரை வகைகள் சிலவற்றையும் அவற்றில் உள்ள நன்மை களையும் கவனிப்போம். கீரை வகைகள் நாள்தோறும் நமது உணவில் சேர்க்கப்பட வேண்டும் எனக் கூறப்படுகிறது. சில கீரை வகைகள் அல்லது இலைகள் சிறந்த மூலிகையாகவும் விளங்குகின்றன.

## பசலைக்கீரை

பசலைக்கீரை இதயநோய் வராமல் தடுக்க உதவுகிறது. குழந்தைகளுக்கு வரும் சில நரம்பு வியாதிகளை வராமல் தடுக்கிறது. பசலைக்கீரையில் பச்சையம் அதிகமாக இருக்கும் பச்சையம் காரணமாகக் கொழுப்பை இலகுவில் கரைக்க உதவுகிறது. இது பார்வைக் குறைபாட்டை வராமல் தடுக்கிறது. வாய்ப்புண் ஏற்படும்பொழுது இதனை உட்கொண்டால் நல்லது. இந்தக் கீரை ரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்கள் மற்றும் ஹீமோகுளோபின் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்கிறது. இதில் உள்ள மக்னீசியம் சத்து ரத்த அழுத்தத்தை சீராக வைத்துக் கொள்ளும் தன்மையை ஏற்படுத்தும். இது குளிர்ச்சி தன்மை கொண்டதால் உயர் வெப்பநிலை கொண்ட காலங்களில் அதிகம் உட்கொள்ளப்படுகிறது. இது புற்றுநோயை எதிர்த்துப் போராடும் சக்தி கொண்டதாகவும் கருதப்படுகிறது.

## தூதுவளை

தூதுவளையில் அதிக கல்சியம் உண்டு என்பதால் எலும்பையும், பற்களையும் பலப்படுத்தும். இதனுடன் மிளகு, சின்ன வெங்காயம், பூண்டு சேர்த்து நன்கு வதக்கி துவையல் செய்து ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் உடலுக்கு வலு கொடுப்பதுடன் இருமல், இரைப்பு, சளி முதலியவை நீங்கும். தூதுவளையை நிழலில் உலர்த்தி பொடியாக்கி வைத்துக் கொண்டு காலை, மாலை என இரு வேளையும் தேனில் கலந்து பத்தியம் இருந்து ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் இருமல், இளைப்பு நீங்கி உடல் வலுவடையும். உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தி கொடுக்கும். ஜீரண சக்தியைத் தூண்டும்.

தூதுவளையை நன்கு அரைத்து உருண்டை செய்து சாப்பிட்டு வந்தால் தலையில் உள்ள கபம் குறையும். காதில் ஏற்படும் மந்தம், இருமல், பெருவயிற்றில் மந்தம் போன்றவற்றிற்கு தூதுவளைக் கீரை சிறந்த மருந்தாகும். மூக்கில் நீர் வடிதல், வாயில் அதிக நீர் சுரப்பு, பல் ஈறுகளில் நீர்சுரத்தல் போன்றவற்றிற்கு தூதுவளைக் கீரை சிறந்த மருந்தாகக் கருதப்படுகிறது. தூதுவளைப் பூவை நிழலில் உலர்த்தி பொடியாக்கிப் பாலில் கலந்து அருந்தி வந்தால் உடலுக்கு வலு கொடுக்கும். தூதுவளை பழத்தை வெயிலில் காயவைத்து பொடியாக்கித் தேன் கலந்து சாப்பிட்டால் மார்புச்சளி, இருமல், நீங்கும். பாம்பின் விசம் காரணமாக ஏற்படும் பாதிப்பை முறிக்கும் சக்தி கொண்டது.

## புதினா

வயிற்றுவலி, வயிற்றுக் கோளாறு, வாந்தி, இருமல், வயிற்று உப்புசம், ஆஸ்துமா, மூட்டுவலி, வாயுத்தொல்லை, மஞ்சள் காமாலை, பசியின்மை, மலச்சிக்கல், மனஇறுக்கம், மூட்டுவலி, சிறுநீர் கழிக்க சிரமம், சிறுநீரில் கல், கல்லீரல் மற்றும் நுரையீரல் கோளாறுகள் போன்ற பிரச்சினைகளுக்குப் பயன் தருகிறது.

## மணத்தக்காளி கீரை



மருத்துவ மூலிகையாகக் கருதக்கூடிய கீரை வகைகளில் ஒன்றாகக் கருதப்படு கின்றது. தொண்டை கட்டு ஏற்படும் பொழுது நிவாரணம் தருகிறது. வயிற்றின் குடல் பகுதிகளில் புண்கள் ஏற்படும் பொழுது நிவாரணம் அளிக்கின்றது.

உடலின் பல்வேறு வகையான செயல்பாடு களுக்கு வைட்டமின், இரும்புச் சத்து, பொஸ்பரஸ், கல்சியம் மற்றும் இதர தாதுக்கள் அவசியமாக உள்ளன. மணத்தக்காளிக் கீரையில் இந்த எல்லா சத்துக்களும் அதிகளவில் நிறைந்திருக் கின்றன. எனவே மணத்தக்காளி கீரையை வளரும் குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர், கருவுற்றிருக்கும் பெண்கள், நடுத்தர வயதுடையவர்கள் என அனைவரும் சாப்பிடுவதற்கேற்ற இயற்கை உணவாக இருக்கிறது.

மணத்தக்காளி கீரையை தினமும் உணவில் சேர்த்து சாப்பிட்டு வருபவர் களுக்கு சிறுநீரகங்களில் கற்கள் உருவாகியிருந்தால் அதனைக் கரைக்க உதவும். சிறுநீரை நன்கு பெருக்கி உடலில் சேர்ந்திருக்கும் நச்சுகளை எல்லாம் சிறுநீர் வழியாக வெளியேற்ற உதவும். பெண்களுக்கு கருத்தரிக்க முடியாத நிலை இருக்கும். இத்தகைய பெண்கள் தங்கள் உணவில் வாரம் இரண்டு அல்லது மூன்று முறையாவது மணத்தக்காளி கீரையைச் சாப்பிட்டு வந்தால் கருப்பைக்குப் பலத்தைக் கொடுக்கும். உடலில் குளிர்ச்சி, வாய்ப் புண், அல்சர் போன்ற பிரச்சினைகள் ஏற்படும்பொழுது இலைகளை வாயில் வைத்து உமிர்நீரை சிறிது நேரம் வாயில் வைத்திருந்து விட்டு வாயைக் கழுவி வந்தால் ஓரிரு நாளில் புண் சரியாகிவிடும்.

## பிரண்டை



இது சிறந்த மூலிகையாகக் கருதப் படுகிறது. அதிக கல்சியம் சத்து கொண்டது. எலும்பில் ஏற்படும் பலவீனத்தைக் குறைக்கிறது.

## கற்பூரவள்ளி

இது கசப்புச் சுவையும், காரத்தன்மையும், வாசனையும் கொண்டது. இதன் இலை மருத்துவ குணம் கொண்டதாகும்.

கற்பூரவள்ளி தாவரத்தின் பாகங்கள் இருமல், சளி, ஜலதோசம் போன்ற நோய் களுக்கு முக்கிய மருந்தாக உள்ளது. உடலில் காய்ச்சல் ஏற்படும்பொழுது நிவாரணம் அளிக்கின்றது.

வியர்வை பெருக்கியாகவும், காய்ச்சல் தணிக்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. இலைச்சாறு, நல்லெண்ணெய், சர்க்கரை இவற்றை நன்கு சேர்த்து நெற்றியில் பற்றுப் போடத் தலைவலி நீங்கும். உடலில் ஏற்படும் சூட்டைத் தணிக்கும். இலை அற்றும் காம்புகளைக் குடி நீராக்கிக் குடித்து வந்தால் இருமல், சளிக் காய்ச்சல் இலிருந்து நிவாரணம் கிடைக்கும். குழந்தைகளுக்கு சளி, இருமல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும் பொழுது கற்பூரவள்ளி இலைச்சாற்றைக் கொடுத்தால் தீர்வு கிடைக்கும்.

இதன் இலைகளை எடுத்துக் கழுவி சாறாக்கி இரண்டு மில்லி லீற்றர் சாறுடன் எட்டு மில்லி லீற்றர் தேன் கலந்து குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால் மார்பு சளி கட்டுப்படுத்தப்படும். உடலில் ஏற்படும் கட்டிகளின் மேல் இந்த இலையை அரைத்துக் கட்ட கட்டிகள் கரையும். வயிறு சம்பந்தப்பட்ட நோய், தசைகளில் சுருக்கம், கண் அழற்சி போன்ற பிரச்சினைகளுக்கு மருந்தாகும். மருத்துவத் துறையில் இது நரம்பு களுக்குச் சத்து மருந்தாகவும், மனக் கோளாறுகளைச் சரிசெய்யும் சக்தி கொண்டதாகவும் விளங்குகிறது. இதனை உண்ணுவதால் சிறுநீரை எளிதில் வெளிக் கொணரவும் உதவுகிறது. இரத்தத்தை சுத்தப்படுத்தும் தன்மை கொண்டது.


## முருங்கைக் கீரை



முருங்கைக் கீரையை வேகவைத்து அதன் சாற்றைக் குடித்து வந்தால் உடல் சூடு தணிவதுடன், மலச்சிக்கல் நீங்கும். முருங்கை இலைகளை நெய்யில் வதக்கி சாப்பிட்டால், ரத்த சோகை உள்ளவர் களின் உடம்பில் நல்ல ரத்தம் அதிகரிக்கும். பற்களின் உறுதி, நீளமான முடியின் வளர்ச்சி, நரை முடி, தோல் நோய், வயிற்றுப் புண், தலைவலி, வாய்ப் புண் ஆகிய நோய்களுக்கு முருங்கைக் கீரை நல்ல மருந்தாக உதவுகிறது. முருங்கை இலையில் ரசம் வைத்து சாப்பிட்டு வந்தால், கை, கால் உடம்பில் ஏற்படும் வலிகள் நீங்கும். முருங்கை இலை தாய்ப்பால் சுரப்பினை அதிக மாக்கும். ஆஸ்துமா, மார்புச் சளி, போன்ற சுவாசக் கோளாறுகளுக்கு முருங்கைக் கீரை தீர்வாக அமையும். ஆண், பெண் இருபாலரின் மலட்டுத் தன்மையை அகற்ற, முருங்கை இலையை வேகவைத்து சமைத்து சாப்பிட வேண்டும். வாயுத்தன்மையை நீக்கும். எதிர்ப்புச்சக்தியை அதிகரிக்கும்.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலால் கிடைத்த தகவல் பதிவாக அமைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர்கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இக்கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக் கேற்ப பொருத்தமான மருத்துவக் கருத்துக்களாக அமைந்து விடாது என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# பாரதியை பாடிய குயில்! - ஆவணப்படம் விமர்சனம்

**கண்ணன்**

செக்கச் சிவந்த வானம்; கூட்டிலிருந்து வானை நோக்கிப் பறக்கும் பறவைகள்; இப்படி ஓர் அழகிய அதிகாலை காட்சி யுடன் கவித்துவமாகத் தொடங்குகிறது, 'திருலோக சீதாராம் என்றொரு கவி ஆளுமை' ஆவணப்படம். பின்னணியில், 'மூலக் கருத்தின் மோனச்சிறையில்;' என சீதாராமின் பாடலும் ஒலிக்க தற்காலத் தமிழர் மறந்துபோன ஒரு ரசனை மனிதரின் வாழ்வு விரிகிறது. பெருங்கவிஞர், பாடகர், மொழிபெயர்ப்பாளர், பாரதி அன்பர், பத்திரிகை ஆசிரியர் எனப் பன்முகங்கள் கொண்ட திருலோக சீதாராம், தமிழுக்குச் சேர்த்த செழுமைகளைப் பற்றி இசையமயமாகப் பேசும் இந்த ஆவணப் படத்தை இயக்கியுள்ளார், தமிழ்நாட்டைச் சேர்ந்த கவிஞர் ரவிசுப்ரமணியன்.

"தமிழுக்குப் பங்களிப்பு செய்த எத்தனையோ ஆளுமைகள் வெளியுலகுக்குத் தெரியாமல் இருக்கின்றனர். அதுமாதிரி வெளியில் தெரியாமல் போய்விட்ட ஆளுமைதான் திருலோக சீதாராம். பாரதி யின் பாடல்களை பாடிப் பாடிப் பரப்பியவர். பாரதி வாழ்ந்தபோதும் பெரிதாக யாரும் கண்டுகொள்ளவில்லை. அவர் இறந்த பிறகும் எந்தச் சத்தமும் இல்லை. பேரமைதி நிலவிக் கொண்டிருந்தது. அந்தத் தருணத்தில் பாரதியின் பாடல்களை தீப்பந்தமாக ஏந்திக் கொண்டவர் சீதாராம்.

தமிழ் இலக்கியப் பரப்பில் பாரதி என்னும் பெயர் இன்று அடைந்திருக்கும் பிரபலத்தை உருவாக்கிய வ.ரா, ஜீவா, திருலோக சீதாராம், பாரதிதாசன் ஆகியோரில் திருலோக சீதாராமுக்கு ஒரு தனித்தகுதி உண்டு. பாரதி மீது கொண்ட பேரன்பின் விளைவாக அவருடைய ஆன்மிகபுத்திரன் என்றே தன்னை அறிவித்துக்கொண்டவர்.

சீதாராம், தமிழ்நாட்டில் பல சிற்றிதழ்களில் பணியாற்றியும், 'சிவாஜி' போன்ற சிற்றிதழ்களை நடத்தியும் இலக்கியம் வளர்த்திருக்கிறார். மொழி வளமிக்க பல கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டிருக்கிறார். 'இலக்கியப் படகு' என்ற கட்டுரைத் தொகுப்பும் வெளிவந்திருக்கிறது. ஜெர்மன் எழுத்தாளர் ஹெர்மன் ஹெஸ்ஸே எழுதிய 'சித்தார்த்தன்' என்ற நோபல் பரிசு பெற்ற நாவலை தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அதேபோல சமஸ்கிருத மொழியில் இருந்து மனுதர்ம சாஸ்திரத்தை தமிழுக்கு அளித்துள்ளார்.

இவ்வளவு சிறப்புகள் இருந்தும் சீதாராம் பற்றிய எந்தக் குறிப்புகளும் தமிழ் இலக்கிய வரலாற்றில் பதிவு செய்யப்படவில்லை. இதுதான், இவரை இன்றைய தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்னும் வேட்கைதான் என்னை இப்படத்தை எடுக்கத் தூண்டியது" என்கிறார் கவிஞர் ரவிசுப்பிரமணியன்.

பளிச்சென்று குங்குமப் பொட்டும் வெற்றிலைச் செல்லமுமாக, இந்த ஆவணப்படம் நமக்குக் காட்டும் திருவையாறு லோகநாதய்யர் சீதாராமன் என்கிற திருலோக சீதாராம், 1917ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தொண்டமாந்துறை என்ற கிராமத்தில் பிறந்தவர். அகத்திய முனிவரைப் போல் குள்ளமான உருவம் தாங்கியவர்.

திருலோக சீதாராம் வாழ்வு பற்றிய ஆதாரங்கள்தான் இந்த ஆவணப் படத்தின் அடிப்படை. என்றாலும், அதை வெறும் தகவல்களாக அல்லாமல் காட்சி மொழியாகவும் இசை வழியாகவும் திறம் படச் சித்தரித்திருக்கிறார் ரவிசுப்ரமணியன். திருலோக சீதாராமின் சீடராக இருந்த 'சக்தி' சீனிவாசன், நண்பர் சோ. சத்திய சீலன், டி.என். ராமச்சந்திரன், மறைந்த எழுத்தாளர் அசோகமித்திரன், திருலோக சீதாராமின் மகன் ராமகிருஷ்ணன் ஆகியோர் இப்படத்தில் பேசியிருக்கின்றனர்.

"திருலோக சீதாராம் பற்றி ஆவணப்படம் எடுக்க வேண்டும் என்ற உந்துதலை அளித்து, குறிப்புகளும் கொடுத்து உதவினார் சேக்கிழார் அடிப்பொடி டி.என். ராமச்சந்திரன். மும்பையில் இருந்த சீதாராம் மகனை அணுகி ஆவணப் படத்திற்கான ஒரு ஸ்கெட்சைக் கொடுத்தேன். அவர் உடனே ஒப்புதலை அளித்தார். அதனையடுத்து திருலோக சீதாராம் பற்றிய தகவல்களைத் திரட்டும் ஆய்வுப் பணியைத் தொடங்கினோம்.



எங்களுக்குக் கிடைத்த ஒவ்வொரு தகவலும் சீதாராம் மீதான மதிப்பையும் மரியாதையையும் அதிகரித்தன. பாரதியாரிடம் ஈடுபாடுள்ளோர் பாரதிதாசனின் முற்போக்குச் சிந்தனைகளை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால், அவரிடமும் நெருக்கமாக இருந்துள்ளார் சீதாராம். திருச்சியில் பாரதிதாசனுக்கு நடந்த மணிவிழாவை கி.ஆ.பெ. விசுவநாதம் தலைமையில் செயலாளராக இருந்து நடத்தியிருக்கிறார்.

தமிழ்நாடு தந்த அறிவியல் மாமேதை ஜி.டி.நாயுடு, நடிகர் என்.எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் காமராசர், காங்கிரஸ் கட்சியின் அக்கால முக்கிய தலைவர்களில் ஒருவரான எஸ். சத்தியமூர்த்தி எனப் பல சான்றோர்களின் அன்பைப் பெற்றிருந்தார் சீதாராம். ஆனால், இந்த நட்புகளை ஒருபோதும் தனக்காக பயன்படுத்திக் கொண்டதில்லை. ஒருமுறை ஜி.டி. நாயுடு, "பெரிதாக ஏதாவது கேளுங்கள் உதவி செய்கிறேன்" என்று கூறியிருக்கிறார். அதற்கு பஸ் ஒன்றைக் கேட்டு வாங்கிய சீதாராம், அந்த பஸ்ஸை சீதாலட்சுமி ராமசாமி பெண்கள் கல்லூரிக்கு மாணவிகள் வந்து போவதற்கு உதவியாக அளித்திருக்கிறார். ஆனால், அந்த நேரத்தில் பணமில்லாமல் கஷ்ட ஜீவனம் நடத்திக்கொண்டிருந்தார்,



சீதாராம்.

புதிய எழுத்தாளர்களை உருவாக்கக் கூடியவராகவும் சீதாராம் இருந்துள்ளார். இவர் நடத்திய 'சிவாஜி' பத்திரிகையில் தான் எழுத்தாளர் சுஜாதாவின் முதல் கதையும், சுரதாவின் முதல் கவிதையும் வெளிவந்தது. 1957ஆம் ஆண்டு ஐம்பது இளம் கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து புதுத் தமிழ் கவிமலர்கள் என்ற தொகுப்பை வெளியிட்டிருக்கிறார்" என்கிறார் ரவிசுப்பிரமணியன்.

தொடர்ந்து, "தமிழ்நாட்டு தமிழரிடையே வரலாற்று பிரக்ஞை குறைவு. இதனால், ஆவணங்களைப் பாதுகாக்க வேண்டிய தேவையையும் நாம் உணரவில்லை. சீதாராமின் குரலோ காட்சியோ கிடைக்கவில்லை. எனவேதான் இந்த ஆவணப் படத்தில் பாரதி, பாரதிதாசன், சீதாராம் பாடல்களைப் படத்தின் இடையிடையே கலந்துள்ளேன்.

தமிழில் ஆவணப்படம் இயக்குவதால் அடைவதற்கு ஒன்றுமில்லை. வருமானமும் கிடைக்காது. புகழும் இல்லை. அதைவிட அதிகபட்ச திரையிடல் வாய்ப்புகளும் இல்லை. ஆனாலும், என்னை ஆவணப் படங்கள் இயக்க வைப்பது, சீதாரம் போன்றவர்களை உந்தித் தள்ளியது எதுவோ அதுதான். எந்த லாபத்தையும் எதிர்பார்த்து அவர்கள் பணியாற்ற 'ில்லை? அவர்களுடைய சமூகத்தின் மீதான காதல், இலக்கியத்தின் மீதான காதல்தான் எதிர்ப்புகளையும் தடைகளை யும் மீறிச் செயல்பட வைத்திருக்கிறது. அதுதான் என்னையும் இயக்குவதாக நினைக்கிறேன்" என்கிறார் ரவிசுப்பிரமணியன்.

சேக்கிழார் அடிப்பொடி தி. ந. இராமச் சந்திரன், தமிழ் எழுத்தாளர்கள் ஜெயகாந்தன், மா. அரங்கநாதன், இந்திரா பார்த்தசாரதி, திருலோக சீதாராம் என தமிழுக்குத் தொண்டாற்றிய பல ஆளுமைகளை ஆவணப்படுத்தியுள்ளார் ரவிசுப்பிரமணியன். வரலாற்றின் மறதிக்குள் மறைந்து போகவிடாமல் தமிழ் சான்றோர் நினைவினை மீட்டெடுத்துத் திரைமொழியில் சேமித்திருக்கும் இவரது பணி பாதுகாக்கப்பட வேண்டியது.

திருலோக சீதாராம் ஆவணப்படத்தை யூடியூப்பில் காண:
https://youtu.be/m9u2KOygB3g

## குடும்ப உறவு



மக்கன்ரி என்றொருவர் ஆட்சி யிற்றான்
  மனிதநேயம் வேண்டுமென்றே மக்கட் காக
தக்கதோர் விடுமுறையைத் தந்து சென்றார்
  தாய்தந்தை பிள்ளைகள்சேர் குடும்ப மொன்றாய்
பக்குவமாய் நண்பர்களும் பாசப் பிணைப்பால்
  பற்றுடனே ஒன்றுசேர்ந்தே பகுத்து உண்டே
விக்கினங்கள் ஏதுமின்றி விருந் தோம்பி
  வீட்டிலே அன்பொளிர வைப்பதிந் நாளே.

வீட்டுக்கு நல்லவளை வைத்திட் டாலே
  வீரமுடன் செயற்படுவான் வீட்டுத் தலைவன்
வாட்டமின்றி வாழ்வதற்கு வழியும் அதுவே
  வாழ்க்கையெனும் ஓடந்தான் வழி தவறா
ஆட்டமின்றிச் சீராகச் செல்வதற்கும்
  அருந்துணையாம் குடும்பமெனும் கோல்கள் தானே
கூட்டமாய்ச் சுற்றத்தார் சூழ்ந்தங் கேதான்
  குடும்நல் லுறவென்றே கூடி மகிழ்வர்.

கோவிபத்தொன் பதின்பின் குடும்ப உறவு
  காரின் கடும்பொழி வென்போர் பலரே
தாவிவரும் கிருமிகளைத் தடுக்க வேண்டும்
  தன்னைத்தான் காக்கவே வீட்டிற் றானே
பாவவினை என்றெண்ணிப் பாசம் காட்டி
  பக்குவமாய்க் காத்திடுவோம் குடும்பந் தன்னை
சாவை விரும்பாதோர் சற்றே சிந்தித்தே
  சேவைசெய் வைத்தியர்கள் சொற்படி நடப்போமே.

வீட்டில் இருப்பதனால் வினைகள் பற்பலவே
  விதிவசத்தால் ஏற்பட்ட தொற்று நோயால்
வாட்டமுடன் தனிமையிலே வாழும் போது
  வறுமையோடு மனவழுத்தம் வாட்டி வதைக்கும்
ஈட்டுகின்ற செல்வமெல்லாம் எங்கோ செல்லும்
  இளையோரின் மனமகிழ்வை காண்ப தரிது
ஆட்டிபடைக்கும் அரனவனின் திருவிளை யாடலே
  ஆள்கின்ற கொரோனாவை அழிப்போம் விரைவில்.
மனவுளைச்சல் காரணமாய் மகன்போய் விட்டான்
  மகனிழந்த குடும்பமோ தத்தளிப்ப மெரிக்காவில்
வனப்பிழந்தே வாழ்கின்றார் மாண வர்கள்
  வகுப்பறைக்குச் செல்லாத கார ணத்தால்
இன்னல் பலவாக ஏக்கத்துக் குள்ளாகி
  என்னசெய்வ தென்றறியா ஏஞ்சல்க ளங்கே
பொன்னான உயிர்களெல்லாம் போகுதே
கொரோனாவால்
  பேயாட்டம் ஆடுகின்ற கிருமிகளைக் கொல்வோம்.

முருகேசு மயில்வாகனன்

# சயீரா நரசிம்ம ரெட்டி - திரை விமர்சனம்




2019இல் வெளிவந்த 'Sye Raa Narasimha Reddy' தெலுங்கு மொழிப்படம் இந்திய விடுதலைப் போராளியும் பாளையக்காரரு மான உய்யாலவாட நரசிம்ம ரெட்டியின் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட படம். இதில் 1847ஆம் ஆண்டில் நரசிம்ம ரெட்டி பிரித்தானியர் களுக்கு எதிராக நிகழ்த்திய போராட்டம் காட்டப்படுகிறது.

